உ
சிவமயம்



"எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி
எழுதி மேற் செல்லும் அழுத கண்ணீர்
ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை
அழித்திடுமோ?" - உமர்கையாம்

கோப்பாய்

வைத்திய கலாநிதி

# பரமேஸ்வரன் சிறீதரன்

[வைத்திய அத்தியட்சகர், கூட்டுறவு வைத்தியசாலை
மூளாய்]

அவர்களது


# நினைவு மலர்

18-05-92

## வைத்திய சேவகனுக்கு வணக்கப் படையல்

வெள்ளம் போல் மக்கள் கூட்டம்
வேதனை போக்க வென்று
உள்ளமே கோயிலாக உவகையாம்
மலர்கள் தூவிக்
கள்ளமில் வைத்திய சேவை
கமழ்ந்திடச் செய்துவிட்ட
வள்ளலே நினது பாதம் வணங்கி
நூல் படைக்கின்றேமே.

மருத்துவ சேவைதன்னை மன்னவர் போற்ற ஆற்றி
உருத்திர மூர்த்தி பாதம்மேவி
ஊனுடம்பு இனிது நீத்த



அமரர்

## வைத்திய கலாநிதி ப. சிறீதரன் அவர்கள்

உதயம் **22-09-1953** மறைவு **18-04-1992**

சிரார்த்த திதி வெண்பா

ஆங்கீரச வருடம் ஆனதொரு சித்திரையின்
நீங்காத அபர பக்கத் துதியையினில் பாங்கான
வள்ளல் சிறீதரனும் வயித்திய கலாநிதி தான்
வெள்ளைச் சடைமுடியன் மெண்பதாம் மேவினனே,
[ஆங்கீரச வருடம் சித்திரை மாதம் 5ம் திகதி சனிக்கிழமை
தேய்பிறை துதியைத் திதி]

**( 18-04-92 )**

யாழ்ப்பாணம் அளவெட்டியை

பிறப்பிடமாகவும்

கோப்பாய் மத்தியை

வாழ்விடமாகவும்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையைப்

பணிமனையாகவும்

வரித்துக் கொண்ட

அமரர்

# பரமேஸ்வரன் சிறீதரன் M.B.B.S.

அவர்களின்

# நினைவு மலர்

காவலடி - கோப்பாய்

18-05-1992

# சமர்ப்பணம்

அன்பும் பண்பும் மிளிர ஆன்மீகத் தொண்டு
புரிந்து இல்லக விளக்காக இறைவாப் புகழ்
பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இடை நடுவில் எங்கும் பயணம் செய்துவிட்ட
பாசமும் நேசமும் நிறைந்த ஆத்மஜோதியே
உங்கள் பாதார விந்தங்களில் துயரத்துளி
கொண்டு தொடுத்த மலர்ச்சரத்தை
சமர்ப்பித்துச் சாந்தியடைகின்றோம்

அன்பு மனைவி மக்கள்
குடும்பத்தினர்

நாவலடி
கோப்பாய்

உயர் சைவத்திரு

## பரமேஸ்வரன் - சிறீதரன் M.B.B.S.

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழ மணித் திரு நாட்டில் புகழ்பூத்த பதிகள் பலவுள. அவற்றுள் அறிஞர் போற்றும் அளவெட்டிப் பதியும் ஒன்று. அளவையில் உயர் சைவ வேளாண் மரபுதித்த அறிஞர் திலகமாம் அருணாசலம் பரமேஸ்வரன் அவர்கள் யாழ்நகர்ப் பதியில் வாழ்வுகந்தசான்றோனும் தம்பிராசா தம்பதியர் பெற்றெடுத்த மங்கையராம் மகேஸ்வரியவர்களை வாழ்க்கைத்துணை நலம் கொண்டமையால் உதித்த கனிஷ்ட புத்திரனே பல்லோரும் பாராட்டும் மருத்துவ மேதை அமரர் சிறீதரன் ஆவர். பெற்றோரும் உடன்பிறப்பும் உற்றாரும் உவர்ந்து போற்ற 22-09-1953ல் சிறீ உதயமாகி வளர்பிறையானார்: வையக வாழ்வில் மனோகரன், வசந்தகுமாரி, விஜயகுமாரி ஆகியவர்களது உடன் பிறப்பாகினார். அண்ணன் மனோகரன் அண்ணி கமலேஸ்வரி அவர்களை மணமாலை சூடியதன் மூலம் மைத்துனியொருவரையும் அன்புத் தங்கை வசந்தகுமாரி அத்தான் சிவதாசனோடு வாழ்க்கைத் துணைநலம் கொண்டமையால் மைத்துனர் ஒருவரையும் பெற்றுக்கொண்டார். பிரியமுள்ள தங்கை விஜயகுமாரி லண்டன் மாநகரேகியதால் பரிந்து நின்றார்.

அவையின் கண் முந்தி யிருப்பச் செய்யும் அரும் பணியுணர்ந்த அன்னையும் பிதாவும் அன்புச் செல்வத்தின் அபிவிருத்திக்கு ஜெபதவஞ் செய்வார் ஆகினர். குருநடை பயின்ற குழந்தை பள்ளிப் பிள்ளையாகி யாழ்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரப்பக் கல்வி கற்றுத் தேறினர். இளமை முதலே தமிழும் ஆங்கிலமும் கசடறக்கற்றுக்கொண்

டார், சைவ சமய அனுட்டானங்களை அறிந்து அனுசரித்து நடந்தார். உயர்தரக் கல்வியை யாழ்-இந்துக் கல்லூரியில் முடித்துக் கொண்டார். விஞ்ஞானக்கலை வல்லுனராகிப் பௌதிகத்துறையிலே தேர்வு பெற்றுக் கொழும்பு மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து வைத்தியக் கலாநிதியாகினர். மருத்துவத்துறை நிறைவுபெறு முன்னரே வாழ்க்கைத்துறையில் இறங்கலானர்.

முப்பதாவது வயதிலே மூதறிஞர் பெருமக்களை பெற்றதனல் பெருமையுற்ற பொற்பதியாம் கோப்பாயில் மண்டல நாயக முதலி வழித்தோன்றலோடு வன்னியநாயக முதலிவழியிணைந்த வள்ளல் செல்லப்பா சுப்பிரமணியம் [ரத்தினபிரியார] அவர்கள் மனோன்மணி யெனும் மங்கை நல்லாளுடன் இல்லற வாழ்வு இனிது மேற்கொண்டதன் பயனாக உதித்த கற்றோரேத்தும் சற்குணவதியாம் கமலமலரனைய கமலாம்பாள் தன்னை 21-10-83ல் வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டார். இன்ப வாழ்வின் பயனாகச் சாந்தினி, கலாபரன் ஆகிய புதல்வரைப் பெற்றும் பேருவகை கொண்டனர்,

நெடிதுயர்ந்த தோள்கள், நீண்டு விரிந்த கரங்கள், புன்முறுவல் பூத்த முகம் செம்மனத்தான், தண்ணளியான். இன்சொலன் அன்பின் அருளுருவம், சிரித்துக் கதைத்து நோயாளரைச் சிரிக்க வைத்து மருந்து கொடுக்கும் கைராசியாளர், செய்யும் தொழிலில் நிறைவு கண்டு பேரின்பம் பெற்றவர். கூட்டுறவின் தத்துவமுணர்ந்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகி அதன் வளர்ச்சிக்காக அயராதுழைத்து உயர்வு கண்டு உள்ளம் மகிழ்ந்தவர். வைத்தியசாலையில் மட்டுமன்றி நடமாடும் வைத்தியசாலையாக ஊருக்குச் சேவை செய்து மருத்துவ சேவையில் மன அமைதி கண்டவர். ஊர் மக்களுக்குமாத்திரமன்றி இல்வாழ்வுக்கு இலக்கணமாகவும் திகழ்ந்தார். அல்லும் பகலும் அயராதுழைத்து அலுத்துக் களைத்து வரும் போதிலும் மருத்

துவ உதவி வேண்டியவர்களுக்கு மறுத்தமை கிடையாது. மனை யாளுக்குச் செய்யவேண்டிய பணிகளைச் செய்து தந்ததை மறந் திட முடியாது. சிரித்துக் கதைசொல்லி மக்களுடன், அளவளாவு தலை மனதிலிருந்தகற்ற முடியாது சிறந்தறியான். கருணை வடி வமான காருண்ணியன் அமரர் சிறீதரனவர். மெய்வருத்தம் பாராது தம்மனையின் தேவைகளைத் தாமே செய்து நிறைவு காண்பார் பிள்ளைகளின் கல்விக்காக வித்திட்டு வைததவர். சாந்தினி யாழ் நகரின் பிரபல கல்லூரியாக விளங்கும் டொன் பொஸ்கோ வித்தியாசாலையில் முதலாமாண்டு மாணவியாகச் சேர்ந்து கற்று வருகிறார். கலாபரன் கோப்பாயில் பாலர் பாட சாலையில் பயில்கின்றார் அன்னவரின் தேவைகளை நிறைவு செய்து சிறந்த குடும்ப விளக்காகத் திகழ்ந்தார்.

இல்வாழ்வின் துணையினால் கீர்த்திகள் பல பெற்றுள்ள- தொழிலதிபர்களாகிய குமாரசாமி சரவணபவன், பாலகிருஸ் ணன், கெங்காதரன் என்னும் மைத்துனர் நால்வரையும் கௌரி அம்பாள், லலிதாம்பாள், புவனேஸ்வரிஅம்பாள் ஆகிய மைத்துனியர் மூவரையும் நடராசபிள்ளை, சற்குணம், சிவ குமாராகிய சகலன்மார் மூவரையும், செல்வராணி கமலாம் பாள், கமலாதேவி, சிவனேஸ்வரி ஆகிய உடன்பிறவாச்சகோ தரியர் நால்வரையும் கண்டு மகிழ்ந்தனர்.

ஆலய வழிபாட்டில் அமைதி காண்பவர், கோயில் விழாக் களிலும் கிரியா அனுட்டானங்களிலும் ஈடுபாடுள்ளவர், தொண்டு செய்வதில் முன்நின்றுழைப்பவர். தண்டு தப்புகளுக் குப் பின் நிற்பவர். விதிவலிது என்பதற்கமைய "நின்றான் இருந்தான், கிடந்தான், கேளலறச் சென்றான்" எனப்படும் செய்திபோல, நோயுற்று இடராமல் நொந்து வாடாமல பாயிற்கிடந்து உழலாமல் ஒரு நொடிக்குள் கோது கிடக்கக் குஞ்சு பறந்துவிட்டது போல் அண்ணலது ஆவி பிரிந்தது. சேவை முடிந்து திரும்புமிடத்து மயங்கியவரை வைத்திய சாலைக்குக் கொண்டேகி மருத்துவ உதவி அளித்தபோதிலும் விதிவென்று விட்டது. தெளிவடையாமலே நேற்றிருந்தார். இன்று இல்லை என்ற சிறப்புக்குரியதான இவ்வுலகை விட்டு

திகழும் ஆங்கீரச வருடம் சித்திரைத் திங்களின் ஆறாம்நாள் (18-04-92) சனிக்கிழமை அபரபக்கத்துத் துதியையும் விசாக நட்சத்திரமும் பொருந்திய புண்ணியப் பொழுதிலே தன்னைப் பாதுகாத்தவர்களும் தன்னாற் பாதுகாப்பட்டவர்களும் கண்ணீர்ச் சொரியச் சிறீதரன் சிவானந்தப் பெருவாழ்வு பெற்றுச் சிவனடி சேர்ந்தார்

அவர் தவம் கை கூடியிருந்தவாறு

உலகத்தா ருள்ளத்துறை உத்தமனாம்
சிறீதரன் தான்
நிலை பெற்ற புகழுடம்பு பெற்று விட்டால்
-அலை யுலகில்
குடம்பை தனித் தொழியப் புள்
-பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு

## மனைவியின் குமுறல்

பொங்கும் கடல் குமுறப் பூந்தமலர் வாடிநிற்க
வங்கம் புயலடித்து வாரிதியில் சாய்ந்தமைபோல்
எங்கள் குலக் கொழுந்தே எங்குற்றீர் ஓர்நொடியில்
செங்குருதி கண் வடிப்பச் செயலற்றேன் மாபாவி

அலைகடற் றுரும்பென அலைகின்றேன் பாவி
சிலையெனக் கதையின்றி மௌனியாய்ச் சென்றீர்
குலைதவழ் கமுகின் பாளைப் புன்முறுவல்
தலைநிமிர் கோலம் தனை யிழந்தேனே.

நெஞ்சத் துணிவுடையோய் நேர்மைத் திறனுடையோய்
அஞ்சுதலும் கெஞ்சுதலும் ஆண்மைக் கழகு இல்லையெனக்
கொஞ்சு தமிழ்பேசும் கொற்றவனே யுனை யிழந்து
துஞ்சு மெனக்காதரவு சொல்ல வினி யாருளரே.

## மக்கள் அலறல்

அள்ளி யணைத் தெடுத்து ஆனந்தக் கதைபுனைந்து
மெள்ள மடி மீதிருத்தி மேன்மை பல செய்துதந்தீர்
கொள்ளைப் பரிவுடனே மோகனப் புன்னகையும்
தள்ளிவிடக் கூடியதோ தந்தையரே யெங்கு சென்றீர்

பஞ்ச மொன் றறியாது பாசமுட னெமை வளர்த்துப்
பிஞ்சு மணம் நோகாது கொஞ்சும் எம்தந்தையே யென்றும்
அஞ்சுத லின்றி நாம் ஆனந்தமாய் வாழ்ந்தோம் உம்மைக்
கஞ்ச தனமாகவே காலன் கவர்ந்து சென்றான்.

## பிதா மாதா புலர்பல்

துங்சுக் கரிமுகவா தூமணியே யென்று நிதம்
சங்கொத்த குரலில் நீ பாடுவதை நாம் கேட்போம்
இங்கெம்மை யாதரிப்பார் யாருளரே பாவியராம்
எங்கள் குல விளக்கே யெமை விடுத்தேயேகினிரே.

பட்டமரமானேம் பாருலகி லுனைப் பிரிந்து
சுட்ட மெழுகுபோல் உருகின்ருேம் பாவியர் நாம்
கட்டிக் கரும் பனைய கண்மணியே உன்பிரிவால்
வட்டப்புயல் நடுவில் மரக்கலம்போல் மாய்கின்ருேம்

## உடன் பிறப்புக்களின் கதறல்

கண்மணி போல வெம்மை மனதிலே கருதிக்கொண்ட
அண்ணலே யுன்னைக் காண ஆவலா யோடி வந்தோம்
தண்ணளி முகங்காட்டாது தாவிய மாயை யாலே
கண்ணில் நீர் செந்நீராகக் கதறவே வைத்தாய் ஐயா,

சூழலும் வளியிடைச் சிறு துரும்பாக
அழுது உருகினேம் அன்புச் சகோதரா!
புழுவாகத் துடிக்கின்ருேம் புன்முறுவல் காணது
அழலது மெழுகு போல் உருகுகின்ருேமே.

## மைத்துனர் மைத்துனியர் புலம்பல்

புத்திரர் போலெம்மை யெல்லாம் புரந்து நின்ற மைத்துனரே
உத்தமரே யேன் பிரிந்தீர் இத்தரணியிலே நாங்கள்
சித்தம் கலங்குகின்ருேம் சிறீதரனே யுனைக்காணுது
கொத்துச் சிரிப்பழகு கோமகனே காண்பதெங்கே;

இன்னல் தருப் பிறவி நோயிடருலகில் களைந்துவிட்டுப்
புல சிரிப்பா லின்பநல்கும் அன்பொழுகு மைத்துனரே
வன்சொல்லே சண்டறியா வாசவனே யுன் பிரிவின்
துன்பமது தாங்குகிலோம் துயர்மேவித்துடிக்கின்ருேமே

## மாமன் மாமி புலம்பல்

பெற்றோர் மனம் குளிரப் பிள்ளை தனைப் புரந்து நிதம்
கற்றோர் மனம் களிப்ப வாழ்வுகந்த மால்மருகா
உற்றார் உறவுகந்து உலகுபுகழ் கொண்டவரே
மற்றோர் மகனெனவே யெண்ணி மகிழ்ந்திருந்தோம்

கண்ணிலான் பெற்றிழந்த காட்சியதுகண்டதுபோல்
மண்ணிலே நின் வரவு ஆயதுவோ
கண்மணிபோல் பிள்ளைகளைக் காத்து நின்றீர்
புண்ணியனே பேயறைந்துபுலம்புகின்றோம்உன்பிரிவால்

## தேற்றம்

மாண்டவர் மீண்டு வந்த வழக்கமோ உலகிலில்லை
ஆண்டுகள் தோறும் தேம்பியழுவதால் பயனுமில்லை
தாண்டவராயன் பாதம் சிறீதரன் சேர்ந்தாரென்று
மீண்டவர் பாதம் போற்றித் தேறுதல் பெற்று நிற்போம்.

# "வீசு புகழ் கோவை மகன்"

ஆயிரத்தித் தொளாயிரத்து எண்பத்து மூன்றின் ஐப்பசித் திங்கள் அளவையூரில் இருந்து வந்து கோவையூரில் குடிபுகுந்தவர் 'சிறீ' என யாவராலும் அன்பாக அழைக்கப்படும் பண்பான வைத்திய கலாநிதி சிறீதரனவர். நெடுமால் வெள்ளியங்கிரிபோல் மேனி; செம்பவளவாய்; புன்சிரிப்புத் தவழும் முகம்.

அந்தகாரம் சூழ்ந்து மக்கள் அவதியும் அவலமும் கொண்டு அலைந்த காலம்; நோயும் பிணியும் சாக்காடும் கண்டு மடிந்த நேரம் வீசு புகழ் கோவை மகனுகக் கைவண்ணமுள்ள 'கர்மயோகி' வந்து சேர்ந்தார். மாந்தளிர் மேனியான்; மாநதருள் மாணிக்கம். சோர்விலன், சினந்தறியான்; இன்சொலன் காட்சிக் கெளியன். இன்னலுறும் மக்கட்கு இரவு பகல் பாராது தன்னல மற்ற சேவை செய்தவர். தலைசிறந்த மருத்துவன்; நிலைகுலையாத நேர்மையினன், சிவபக்தன்; சமூகசமய சேவகன். பெருமை சிறுமை பாராது வறுமை செல்வம் நோக்காது சொந்த பந்தம் பேசாது நோய் நாடி வந்தவர் வாய் நாடி வாய்ப்பச் செய்து பிணிதீர்த்த கோவையூரக வயித்தியன் எமநூரின் கோவில் திருப்பணிகட்கு வரையாது வழங்கிய வள்ளன்மையை மறக்கவோ மறைக்கவோ முடியாது.

சொந்த மண்மீது கொண்ட பற்றுக் காரணமாக வெளிநாடு செல்வதற்குரிய வாய்ப்புகள் தேடிவந்தபோது புறக்கணித்து விட்டவர், சிரித்துப் பேசிச் சிந்திக்க வைப்பவர். பசி நோக்காது. கண்துஞ்சாது பகலிரவு பாராது பறந்துபறந்து ஊரவர் [நோய் தீர்த்த உத்தமன். உள்ளத்தால் உயர்ந்து உலகு பயன்பெற உழைத்துச் சான்றுண்மையாளனுக, சைவ சமய சீலனுக வாழ்ந்து காட்டிய சிறீதரனது திடீர் மறைவு

நாட்டுக்கும், நண்பர்களுக்கும், கோவையூருக்கும், குடும்பத்தவர்க்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

"சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டிடையே
தில்லென்று நீத்து நெடுந்தூரம் போயினையோ

என அலறி அல்லலுறும் குடும்பத்தவருக்கு ஆறுதலளிக்க எவராலும் முடியாது. 'சிறீ' பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவன் அடிசேர்ந்து விட்டமை எப்பவோ முடிந்த காரியம். பெருமகனுருக்குப் பேரின்பப் பெருவாழ்வு நிச்சயம். வாழ்வு தாழ்வுகளில் கைகொடுத்து வாழ்ந்துள்ள துணைவி, பிள்ளைகட்கும் அவர் தம் தாய்தந்தை சுற்றத்தவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன். ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி.

'மாவடி' பாசமுள்ள நேயன்
கோப்பாய். **அ. சுப்பிரமணியம்**

உ
சிவமயம்

# "கர்ம யோகி" டாக்டர் ப. சிறீதரன்

'சிறீ' என்று எம்மால் அன்புடன் அழைக்கப்படும் டாக்டர் சிறீதரனை நான் 1987ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில்தான் முதன்முதலில் சந்தித்தேன். அப்பொழுது இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளினால் யாழ்குடா நாட்டில் மற்றைய வைத்தியசாலைகள் இயங்கவில்லை. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மட்டுமே இயங்கி வந்தது, டாக்டர் சிறீதரன் சத்திரசிகிச்சைக்கு உட்படும் நோயாளருக்கு மயக்க மருந்து கொடுக்கும் டாக்டராக பணிபுரிந்தார்.

இவரது அயரா உழைப்பைக் கண்டு நான் வியப்பதுண்டு. காலையில் சத்திரசிகிச்சை அறைக்கு (*Operation Theatre*) சென்றால் இரவு பத்துப் பதினொரு மணிக்குத்தான் வீடுதிரும்புவோம். அப்பொழுது இவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. வைத்தியசாலை வளவினுள் ஷெல் விழுந்தாலும் தன் மனைவியும், மகளும் பாதுகாப்பாக இருப்பரர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தன் தொழிலைத் தொடர்ந்து சலனமின்றிச் செய்வார், இவரின் இந்த அருங்குணத்தினால் எத்தனையோ உயிர்களையும் பலரின் அங்க அவயங்களையும் அக்கால கட்டத்தில் நாம் காப்பாற்ற முடிந்தது.

கடந்த ஐந்து வருடமாக நான் அவருடன் பழகியும் இதுவரை அவர் யாருடனும் கோபமாகப் பேசியதை நான் காணவில்லை.

தனக்கென்று மேலதிக சம்பளமோ அல்லது சௌகரியங்களேயோ ஒருநாளும் கேட்கவில்லை. இவற்றைப் பார்க்கும் பொழுது இவர் ஓர் பற்றற்ற பிறவியோ என்று நான் நினைப்பதுண்டு. ஆனால இவர் தன் பெற்றோர்களிலும், மனைவி மக்களிலும் அளவற்ற பாசம் கொண்டவர் என்பதை நான் அறிவேன்.

வைத்தியர் என்ற ரீதியில் இவர் பல துறைகளிலும் சிறந்து விளங்கினர், இப்போதைய கஷ்டமான காலகட்டத்தில் டாக்டர் சிறீதரன் மூளாய் வைத்தியசாலையில் அச்சாணியாகத் திகழ்ந்தார் என்று சொன்னால் மிகையாகாது. இவரின் மறைவு வைத்தியத்துறைக்கும் முக்கியமாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கும் பெரும் இழப்பாகும். இவருடன் இணைந்து கடமை புரிந்த எனக்கும் எனது மனைவி டாக்டர் திருமதி *V. M.* கருணகரனுக்கும் இது ஒரு கை ஒடிந்தது போலாகும்.

வைத்தியர்கள் பற்றாக் குறையினல் நோயாளிகள் அவதியுறுகிருர்கள். வைத்தியர்கள் பலரும் தமது முன்னேற்றத்திற்கும் யுத்தத்தின் பாதிப்பாலும் பிற நாடுகளுக்கு செல்வது வழக்கமாகிவிட்டது. டாக்டர் சிறீதரனுக்கும் வெளிநாடு செல்வதற்கு பல வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஆயினும் அவர் அதை துச்சமாக மதித்து இந்த மண்ணிலேயே கடமையாற்றுவேன் எனத் துணிந்து அதன்படியே செயற்பட்டார். பலவித அழுத்தங்களையும் சமாளித்து மூளாய் வைத்தியசாலைக்கு அளப்பரிய சேவையாற்றினர்.

அன்று சித்திரை 17ம் திகதி கடும் காய்ச்சலும் வாந்தியும் அவரைப் பாதித்த பொழுது மெய்வருத்தம் பாராது கோப்பாயிலிருந்து மூளாய்க்கு துவிச்சக்கரவண்டியில் வந்து எனக்கு உதவியாக ஓர் நோயாளிக்கு மயக்க மருந்துகொடுத்து தன் கடமையைச் செய்து பின் வீடு நோக்கிச் செல்லும் போது வீதியில் மயக்கமுற்றார். மறுநாள் காலன் அவரை

எம்மிடமிருந்து பிரிதது எங்களை ஆருததுயரில் ஆழ்த்திவிட்டான், மெய் வருத்தம் பாராது பலன் கருதாது கடமையே கண்ணுயிருந்த டாக்டர் சிறீதரன் ஓர் கர்மயோகி. கீதையில் கூறப்பட்ட கர்வமின்மை. டம்பமின்மை, இம்சை செய்யாமை பொறுமை, நேர்மை, ஆசார்யனை வழிபடுதல், தூய்மை, ஸ்திரத்தன்மை, தன்னைக் கட்டுப்படுத்தல் ஆகிய ஆத்ம ஞானத்தின் குணங்கள் அனைத்தும் இவரிடம் காணப்படுகிறது. இவரிற்கு சொர்க்க வாசல் நிச்சயம் திறந்திருக்கும்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்,

டாக்டர் வே. கருணுகரன்
M.B.B S. MRCOG (UK)

## நான் அறிந்த ஸ்ரீதரன்

டாக்டர் சிறீதரனுடைய மரணம் தமிழ் சமுதாயத்திற்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரின் மனச்சாட்சியுடனான தன்னலமற்ற சேவையை அவருடைய சகாக்களும், நோயாளர்களும் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

இவருடைய இளவயது மரணம் நிகழ்ந்த நாளில்கூட அவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் ஓர் சத்திர சிகிச்சையை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் வழியில் கொடூரமான நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணித்தமை அவரின் தன்னலமற்ற சேவைக்குச் சான்றாகும்.

இவர் ஒரு மயக்க நிபுணர் மட்டுமல்ல ஓர் சிறந்த வைத்தியருமாகத் திகழ்ந்தார்.

இவர் எனது ஓர் உற்ற நண்பர்.

அன்னாரின் இழப்பை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக

இவரின் மனைவி, மக்கள், உற்றார் உறவினர், நண்பர்கட்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**டாக்டர் தி. கங்காதரன்**

## கடமையின் மத்தியில்...

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' டாக்டர் சிறீதரனின் வேதவாக்கு இதையே இராமநாமம்போல் உச்சரித்து அவ்வழி நின்று மூளாய் ஐக்கிய கூட்டுறவு ஆஸ்பத்திரியை இந்நிலைக்கு உயர்த்தப் பேருதவிகள் பல செய்துள்ளார்.

தனது முன்னேற்றமல்ல. தான் பணிபுரியும் நிறுவனத்தின் முன்னேற்றமே முக்கியமானது என்ற எண்ணத்துடனே அல்லும் பகலும் உழைத்து அரும்பணியாற்றிய அன்பர். 16-4-92 அவர் தன் வீட்டில் வாந்தி எடுத்து காச்சலுடன் இருந்தவர். அடுத்த நாள் காலை வெறுவயிற்றுடன் சைக்கிலில் 18 மைல் மூளாய் ஆஸ்பத்திரிக்குப் போய் லீவு போட்டு வருகிறதாகச் சொல்லிச் சென்றவர் அங்கு சென்றதும் கடமையுணர்வுடன் பணியாற்றினார்.

உணவின்றி இருந்தமையால் தேசிக்காய் கரைத்துக் குடித்துவிட்டு பிற்பகல் ஐந்து பணிக்கு வீடு திரும்பும் வழியில் மருதனைமடம் சந்தியில் தேனீர் கடை அருகில் மயங்கி விழுந்தார். பிறகு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோன பொழுது மயக்கம் தெளியவில்லை. அவரைச் சோதித்த டாக்டர் "*Cerebral Thrombosis*" என்றார் மறு நாள் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் அவர் சிவபதம் அடைந்தார்.

சு. நகுலேஸ்வரர்
நாவலடி
கோப்பாய்

# மறைந்தும் மனதை விட்டகலா எங்கள் டாக்டர்

அன்பும் பண்பும் அமைதியும் கடமையுணர்வும் நிறைந்த எங்கள் வைத்திய அதிபர் டாக்டர் சிறீதரனின் திடீர்மறைவு எங்களை பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கி நிலைகுலைய வைத்துள்ளது.

1985ம் ஆண்டு நவம்பர் மாதம் எங்கள் ஆஸ்பத்திரியில் கடமையாற்ற வந்து சேர்ந்தார், அன்று தொடக்கம் மூளாய் ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளருக்கு மிகுந்த அன்புடன் திறமையாக வைத்திய சேவை செய்து அயராது உழைத்தவர். சிறுவர் வைத்தியம், சத்திரசிகிச்சை வைத்தியம், மகப்பேற்று வைத்தியம், மயக்கமருந்தேற்றும் வைத்தியம் என்று அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தவர். வைத்தியசாலைப் பணிப்பாளருடன் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெரிதும் உதவியவர், வைத்திய நிபுணர்களுடன் சேர்ந்து கடமையாற்ற எதுவித தயக்கமோ, முரண்பாடோ இல்லாமல் புன்னகை உதிர்க்கும் வதனத்துடன் தோற்றி அவர்களது உள்ளம் கவர்ந்தவர். சக டாக்டர்களுடன் எதுவித மனத்தாங்கலும் இல்லாமல் கண்ணியமாகச் செயல்பட்டு அவர்களது பாராட்டைப் பெற்றவர். ஏனைய ஊழியருடன் அன்னார் பழகிய விதம் தனியானது. எவரது மனதையும் உறுத்தாத விதத்தில் அவர்களுடன் பேசி, அவர்களது அன்பைப் பெற்று' சிறந்த முறையில் வைத்தியசாலையை நடத்தியவர்.

ஆரம்பத்தில் தனது அன்பு மனைவியுடனும் அருமைப் புதல்வியுடனும் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சேவையாற்றியவர். 1987ம் ஆண்டு இங்கு வந்த இந்திய இராணுவ தாக்குதலால் வைத்தியசாலை விடுதியை விட்டுச்

சென்று, இங்கிருந்து 16 மைல் தொலைவிலுள்ள தமது இல்லத்திலிருந்து கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெய்யிலிலும், குண்டுமாரி பொழிகையிலும் இவையெல்லாவற்றையும் துச்சமெனக் கருதி இந்திய இராணுவ நடவடிக்கையால் உடல் ஊனமுற்றவர்கட்கு இரவு பகலாக இப்புனித சேவையைத் திறம்பட செய்வதற்கு விரைந்து வந்தவர்.

இவ்வாறு தன்னலமற்ற சேவையாளனை இழந்த பணிப்பாளர் துன்புற, இப்படியொரு டாக்டரை இனி எப்போது காண்போமென வைத்திய நிபுணர்கள் இன்னலுற, இவ்விதமான வைத்திய அதிபர் எமக்கு மீண்டும் வருவாரா என சக டாக்டர்களும் ஏனைய ஊழியர்களும் சித்தம் கலங்கிப் புலம்ப சிறீதரன் ஐயாவே, நீங்கள் எங்கு சென்று மறைந்து விட்டீர்களோ என்று நோயாளர் கதற 17-04-92 அன்று எம்மை விட்டுச் சென்றவர். 18-04-92 அன்று இவ்வுலகையே நீத்து விட்டார்.

தன்னலமற்ற, ஈடிணையற்ற சேவையாற்றிய எங்கள் தெய்வம் டாக்டர் சிறீதரனின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்போம்.

அன்பு மனைவிகும், மழலைச் செல்வங்களுக்கும், உற்றுருக்கும் அன்னாரது நினைவாக என்றும் உதவக் கடமைப்பட்டுளளோம்,

## ஆத்ம சாந்தி வேண்டுகிறோம்

வைத்திய நாதனெங்கள் பரமேஸ்வரன்
நயந்துவந்த கலாநிதியே சிறீதரனே
ஜெகமதிலே உன்போல சேவைசெய்தார்
ஒருசிலரே சரித்திரத்தில் உண்டு என்றால்
மிகையில்லை நம்மிடையே உந்தன்சேவை
நயந்ததனால் இன்றுந்தன் பிரிவுகண்டு
வருந்துகின்றோம் கன்றிழந்த பசுவைப்போல
கதறுகின்றோம் உன்கூடச் சேவைசெய்தோம்

போனஉயிர் மீளாது என்பதிலே
புதுமையில்லை ஆனாலுன் சேவையிலே
போனஉயிர் மீளவைத்த புதுமைகண்டோம்
புண்ணியனே சிறீதரனே! மூளாயில்நீ
வாளாது இரவுபகல் சேவைசெய்தே
வைத்தியத்தின் பெருமைதன்னை வறியவர்க்கும்
தாளாது செய்துவந்த தகைமையினை
தனித்துவத்தைத் தான்மறவோம் ஐயாஉண்மை

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் பொதுவாய்நின்றே
பரந்தாமன் பகைமுடித்தான் பொறுமைகொண்டே
ஈங்கெவாக்கும் பொதுவான கண்ணியத்தோ(டு)
இயங்கினை நீ என்பதனால் உன்பெயரும்
ஆங்குநம துள்ளமெல்லாம் ஆளும்கண்ணன்
அவன்பெயரோ டொத்ததுகாண் சிறீதரனே
நீங்குமுயிர் நிலைகொள்ளும் வைகுண்டத்தில்
நின்புகழோ நிலவுலகில் நீடுவாழும்

அளவெட்டி தனில்பிறந்த அரியசெம்மல்
அழவைத்தே சென்றாய்உன் அரியசேவை
திசையெட்டும் பரவியதே சிறீதரனே
தீராத கவலைகொண்டோம் விதியைமாற்ற
ஆராலும் முடியாது ஐயாஉந்தன்
பேராலும் புகழாலும் பிரிவினாலும்
பித்தாகி நின்றோம்காண் சாந்திவேண்டிப்
பிரார்த்தனையும் செய்கின்றோம் சாந்தி, சாந்தி.

***மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஊழியர்கள்***

# மண்வாசனையும் மனிதநேயமும் மிக்கவர்

நோற்றப் பொலிவு இல்லையென்ருலும் அழகன், பண்பாளன், கைராசிக்காரன் என்றும் பலராலும் போற்றப்பட்ட காலஞ்சென்ற டாக்டர் சிறீதரன் அவர்களை சுப்பிரமணியம் ஐயா வீட்டில் புகுந்த நாட்கள் தொட்டு அறிவேன். படாடோபமற்ற சாதாரண வாழ்க்கை முறையை விரும்பியவராகவும், தனது தொழிலின் உண்மை நிலையை விளங்கியவராகவும் அண்மைக் காலம்வரை மூளாய்க் கூட்டுறவு வைத்தியசாலையின் அத்தியட்சகராகவும், தனியார் மருத்துவக்கல்லூரியின் போதனு ஆசிரியராகவும் இருந்திருக்கிருர்.

காலன் அழைப்பு விடுத்தபோதும், தனது கடமையே பெரிதென உணர்ந்து இறுதி நேரம் வரை தொழில் செய்து மறைந்த மனித நேயமிக்க இவரின் குண இயல்புகள் சில இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும நண்பர்களுக்கும் வருங்கால வைத்தியச் சந்ததியினருக்கும் எங்கள் எல்லோருக்குமே உதாரணமாக இருக்கக்கூடியவையாகும். தனது தொழிலில் ஓய்வு எடுத்த நாட்கள் கிடையாதென்றே கூறலாம். தான பெற்ற வைத்தியக் கல்வியையும் அதன் பயன்பாட்டையும் சொந்த மண்ணே அனுபவிக்க வேண்டுமென்ற தளராத நம்பிக்கை கொண்டவரும், அவ்விதமே வாழ்ந்தும் காட்டிய உத்தமன்.

அவருக்குப் புகுந்த வீட்டாரின் உதவி, ஒத்தாசை என்றும் இருந்தது, சுப்பிரமணியம் ஐயா அவர்கள் தனது பிள்ளையின் பாச உணர்வால் பல தடவைகள் மருமகனைக் கொழும்புக்கு அழைத்துத் தொழில் புரிய வைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அன்னர் கொழும்புக்கு வந்தபோது, தொழில் செய்வதற்கான நவீன வசதிகள் கொண்ட கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தும் கதை கொடுக்கவே அடுத்த நாள் விடியற் காலையிலேயே

ஊருக்குப் புகையிரதம் எடுத்துக்கொண்டார். இதற்கு முன்பு ஒரு தடவை இவரின் மைத்துனர் ஒருவர் இவருக்கு கொழும்புக்கு இடமாற்றம் கிடைப்பதற்கான ஒழுங்குகளை முன்கூட்டியே செய்துவிட்டு இவரையும் இவரின் மனைவியையும் வைத்திய இலாகாவில் உள்ள ஒரு பெரியவரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து, இடமாற்றக் கதையை ஆரம்பிக்க அன்னர் இருந்த இடத்தையே விட்டு மெல்ல நகர்ந்துவிட்டார். அந்தப் பெரியவருக்கே இவரின் செயல் புதினமாயிற்று இந்தப் பெரியவர் இன்று ஒரு சர்வதேச வைத்திய ஸ்தானத்தில் கடமை புரிகிறர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இவரின் உறவினர்கள் வெளிநாட்டில் இருப்பவர்கள் பலதடவை தங்கள் நாடுகளுக்கு அழைத்துத தொழில் புரிய வைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளில் தோல்வியே கண்டார்கள். கோப்பாயில் உள்ள நண்பர்கள், நலம்விரும்பிகள் ''ஏன் தம்பி இவ்விடமிருந்து கஷ்டப்படுகிறீர்கள்? கொழும்புக்குப் போகலாமே'' என்று கூறிக்கொண்டால் "ஏன் நான் இவ்விடமிருப்பதில் என்ன இடைஞ்சல்'' என்று மறுத்தான் போடுவார்.

இவர் கடவுள் பக்தி மிக்கவர். வயோதிபப் பெற்றோரின் தேவைகளைப் பூர்த்திசெய்து அவர்களுக்காக எத்தனையோ அர்ப்பணங்களைச் செய்தவர். தனது தொழிலில் காட்டிய அக்கறையும் ஆர்வமும் எதுவிதத்திலும் அவரின் குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கவில்லை. இவரும் மனைவியாரும் இரு பிள்ளைகளும் சந்தோஷமாக 'ஒரு பல்கலைக் கழகம்' போன்று வாழ்ந்தார்கள்.

அன்னரின் ஆத்மா சாந்தியடைவதாக.

சதா. லோகேஸ்வரன்
(முன்னாள் கோப்பாய் பிரதேச
சபைத் தலைவர்)

# A DEDICATED DOCTOR

Dr. Sritharan's untimely death is an irreparable loss to the Tamil community.

He was a very conscientious and dedicated doctor.

Even on the day of his fatal illness he had administered anaesthesia for a surgical patient.

He was not only a good anaesthestist but also very capable general practitioner.

He was a personal friend of mine and his death is a great personal loss for me.

I extend my deepest sympathies to his family.

*Dr. T. Gengatharam*

Van-West Clinic & Nursing Home,
Jaffna.

# A Gentleman of First Grade

The untimely of Dr. Parameswaran Sritharan on Saturday, 19th April 1992 was a shock to me and to the whole Staff of the Moolai Teaching Hospital. I was so much grieved, that I felt my own brother has passed away.

He worked at Moolai Hospital for a period of Seven Years not nearly as a General Practitioner but as a Physician, Surgeon, Gynecologist, Ophthalomolgist, Paediatrician and even as an Anaesthetist His understanding of the Medical Science was so profound, that he was able to treat all types of patients with confidence. His devotion to work and sense of responsibility made him to work even in a state of ill-health. On the day, he fell seriously ill, his wife has advised him to stay at home, as he showed signs of ill-health, but he went to Hospital and attended his duties as usual.

Providence was very unkind to him and to us, On his way home from Moolai Hospital, all of a sudden he became unconcious at Maruthanamadam and was rushed to Jaffna Hospital" The consultants attended on him did their best to save his life It is said, that even the most emirent doctor could only one an ailment but cannot prevent a person from dying- Dr Sritharan passed away suddenly from our midst at the age 39 and allowed us to be immersed in deep sorrow by his sudden and untimely demise

He was a gentleman of the first grade, always refered in thought and deed. The amirable qualities he possessed were his inborn traits He was very kind, gentle and polite to every one His death is a personal loss to me, as he helped me immeseely in the administration of the Hospital.

Although he has passed away from our midst, he will continue to remain in the hearts of every one who had associated with him

Let us involve the blessings of god that that his soul rest in peace

***Dr. S. Sivanandarajah***
Hony Director
Co-Operative Teaching Hospital
Moolai, Chulipuram.

# Dr. P. SRITHARAN AN APPRECIATION

The premature death of Dr. Sritharan was a great shock to all of us who have been close to him. He was a calm confident and dedicated Medical Officer and was an asset to the Moolai Co-operative Hospital. Dr. Sritharan Had been gifted with talent in many fields of Medicine. To quote an example no patient with a poorly healing wound has left Moolai Hospital without being completely cured. This was due to his undivided personal attention and dedication to his work. He was also a good anaesthetist and tackled all emergencies without excitement and with confidence

In the past five years I have known him the days he has taken leave could be counted by the fingers of one hand. This was the difficult time we all underwent and Dr. Sritharan whether it rains or shines whether bombing or shelling cycled from Kopay to Moolai to ahead to his work,

I khow well that he had many opportunities to emigrate to countries like Canada and Australia, Because of his desire to coork amoung his people he resisted all presseres to go abroad, At this crucial time when we have acute Shortage of Medical officers I cannot understand God's will to take him away from us, The loss of dedicated people like Dr. Sritharan is a great loss to our suffering community,

I cannot condole in words his family who are particularly affected by his untimely departurer I pray to God to help the family to find Soolace and may Dr, Sritharan's soul rest in peace,

***Dr. Mrs. V.M. Karunaharan***
MBBS MRCP, DCB,

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்
கவர்கள் வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த
அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி
வனன்றே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே!

## திருப்புகழ்

நாளென் செயும்வினை தானென்
செயும் எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங்கடம்பு மெனக்கு முன்
னேவந்து தோன்றிடினே

பட்டினத்தார் ,அருளிய
[திருமுறை II]

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்
சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றி யூருடை
யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்
தோதவுங் கற்பியுமே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்துக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆவிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தண்ணறிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கள் மழைபொழிந்தார்
வானவர் பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி
மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்
கம்பெருமான்

## திருப்புகழ்

திருமக ளுலாவு மிருபுயமு ராரி
திரு மருக நாமப் பெருமாள்காண்
சேகதாமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவும் அடியார்கள் மனதில் விளையாடும்
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதருளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர் காமப் பெருமாள்காண்

# நன்றி நவிலல்

எமது குடும்ப தலைவன் மயங்கிய நிலையில் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்று உதவியவர்கள் மருத்துவ உதவி அளித்திட்ட வைத்திய கலாநிதிகள், தாதியர் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும், மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் ,கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், நினைவு மலர் முழுமைபெறச் செய்தி வழங்கிய அனைவருக்கும், அன்புள்ளம் கொண்டு 'ஆத்மசாந்தி' வேண்டி நின்ற மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வைத்திய கலாநிதிகளுட்பட சக ஊழியர்கள் அனைவருக்கும். கருமாதிகள் இனிது நிறைவேற உதவிய யாபேருக்கும் இன்றைய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும எமது நன்றி.

மனைவி - மக்கள்

"மண்ணில் வளமாம் வாழ்ந்து முடித்தே
விண்ணிலும் இனிதே வாழவிழைந்தனர்"

ஸ்டான்கார்ட் பிரின்டர்ஸ் லிமிட்டெட், கொழும்பு-11.